# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 23.02.2026**

**அசல் வழக்கு எண். 41/2018**

**பி.வா.சா.1 (முருகன்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பிராது தபசில் சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து எனது தந்தைக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா எனது தந்தைக்கு எழுதிக்கொடுத்தார். எனது தாத்தாவின் பெயர் என்னவென்றால் எனது தாத்தாவின் பெயர் எனக்கு தெரியாது. பிராது தபசில் சொத்து பொறுத்து எனது தாத்தா என் தந்தைக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பிராது தபசில் சொத்து பொறுத்து எனது தாத்தா பெயரில் உள்ள வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பு பிராது தபசில் சொத்து பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. பிராது தபசில் சொத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தை என் தந்தை எனக்காக பிறப்பித்துக் கொடுத்தபிறகு அந்த இடத்திற்கு சென்றேன். அந்த இடத்திற்கு பி.வா.சா.ஆ.3 ஆவணம் பிறப்பிக்கப்பட்ட பிறகுதான் நான் முதன்முதலாக சென்றேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு அந்த ஆவணத்தில் கண்டுள்ள சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். என் தந்தையின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தையின் பூர்வீக ஊர் என்னவென்றால் பன்னீரூத்து கிராமம் ஆகும். எனது தாத்தாவின் பூர்வீக கிராமம் பன்னீரூத்து கிராமமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. பிராது தபசில் சொத்திற்கு தெற்கில் காலனிவீடுகள் உள்ளனவா என்றால் காலனி வீடுகள் உள்ளன. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டுள்ள தபசில் சொத்தில் மேல்புறம் உள்ள சொத்தை என் அண்ணனான 1ம் பிரதிவாதிக்கு என் தந்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். என் அண்ணனுக்கு என் அப்பாவால் எழுதிக் கொடுக்கப்பட்ட

சொத்திற்கு மேற்கு பக்கத்தில் மாடசாமியின் இடம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் என் தந்தையால் எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட சொத்தை சுற்றி யாருடைய இடங்கள் உள்ளன என்பது பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தந்தை எனக்கு இரண்டு சொத்துக்களை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த இரண்டு சொத்துக்களுள் காலனி வீடுகளுக்கு வடக்கில் உள்ள சொத்து பொறுத்துதான் எனக்கும், பச்சமுத்துகோனாருக்கும் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். மற்றொரு சொத்தை பொறுத்து எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை என்றால்சரிதான்.

4. மேற்கூறிய பிரச்சனை நடக்கும் இடத்தின் மொத்த விஸ்தீரணம் 60 சென்ட் என்றால் சரிதான். வாதி எந்த சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து எங்கள் பூர்வீக சொத்தாக இருந்தால் அந்த சொத்தில் நான் பிறந்த சமயத்திலேயே எனக்கு ஒரு பங்கு ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தை பொறுத்து என் தந்தை எனக்கு எழுதிக்கொடுத்தால் பாத்தியம் ஏற்பட்டதா அல்லது என் பிறப்பின்போதே அதில் ஒரு பங்கில் எனக்குபாத்தியதை ஏற்பட்டதா என்றால் என் தந்தை எழுதிக் கொடுத்ததால் பாத்தியதை ஏற்பட்டது. என் பிறப்பின்போது அதில் ஒரு பங்கு ஏற்பட்டதா என்று எனக்கு தெரியாது. பிராது தபசில் சொத்து பொறுத்து என் தந்தை பெயரில் பட்டா வழங்கப்பட்டதன் அடிப்படையில் மட்டுமே அந்த சொத்து என் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகிறேன் என்றாலும், அந்த சொத்தை பொறுத்து என் தந்தை பெயரில் ஏற்படுத்தப்பட்ட வேறு ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் சரிதான்.

5. 1ம் பிரதிவாதி முத்துக்குமாருக்காகவும் சேர்த்து நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்காகவும் சேர்த்து இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்காததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை.

6. பிராது தபசில் சொத்தை பொறுத்து வாதி எவ்வகையில் பாத்தியம் கோருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பச்சமுத்துகோனாரின் தயார் பெயர் மாடத்தியம்மாள் என்றால் சரிதான். மேற்படி மாடத்தியம்மாள் பிராது தபசில்

சொத்தை பொறுத்து கோவில்பட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் முவ.எண்.30/1960 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் 03.02.1961ம் தேதியில் ஒரு சமாதான தீர்ப்புரை வழங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகி என்னிடம் மேற்படி வழக்கு மற்றும் தீர்ப்புரை பற்றி குறுக்குவிசாரண செய்யப்படும்போதுதான் அது பற்றிய விபரத்தை நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு பற்றிய விபரம் எனக்கு இன்றைக்கு தான் தெரியும் என்பதால் அவ்வழக்கை பற்றி மறுப்பு எதுவும் என்னால் இன்றைக்கு முன்பு கொடுத்திருக்கமுடியாது என்றால் சரிதான். மாடத்தியம்மாள் இறந்து சுமார் 15 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது. பிராது தபசில் சொத்து முவஎண்.30/1960 ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி வாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், பிராது தபசில் சொத்தில் எனக்கும், எனது குடும்பத்திற்கும் எந்தகாலத்திலும் பாத்தியம் ஏற்பட்டதில்லை என்றாலும், பிராது தபசில் சொத்து பொறுத்து என் தந்தை பெயரில் தவறுதலாக பட்டா வழங்கப்பட்டதை பயன்படுத்தி பி.வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் பிராது தபசில் சொத்தில் எனக்கு பாத்தியம் இருப்பதாக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் என் செல்வாக்கை பயன்படுத்தி பெறப்பட்ட ஆவணம் என்றாலும், அந்த ஆவணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கும், பிராது தபசில் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், அதனால் அந்த ஆவணமும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. பிராது தபசில் சொத்து வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றாலும், வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், வாதிகளின் வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**